**வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் ஆரம்ப மட்ட தேர்ச்சியற்ற சேவையின் கீழான (PL-1-2016) மாகாண கூட்டுறவு பயிற்சி நிறுவனத்தின் நிலையக் காப்பாளர் பதவிக்கான சேவைப் பிரமாணக்குறிப்பு**

1. நடைமுறைக்கு வரும் திகதி:

இச் சேவைப் பிரமாணக்குறிப்பு 2019.01.01.ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் கௌரவ ஆளுநரின் அனுமதியைப் பெற்று இந்த புதிய சேவைப் பிரமாணக் குறிப்பு நடைமுறைப்படுத்தப்படும்.

2. வரைவிலக்கணங்கள்:

2.1"பிரமாணக்குறிப்பு" என்பது வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் மாகாண கூட்டுறவு பயிற்சி நிறுவனத்தின் நிலையக் காப்பாளர் (ஆரம்ப மட்ட தொழிற் தேர்ச்சியற்ற பணியாளர்) பதவிக்கான சேவைப் பிரமாணக் குறிப்பைக் குறிக்கும்

2.2"கௌரவ ஆளுநர்" என்ற பதம் வடக்கு மாகாணத்தின் கௌரவ ஆளுநர் அவர்களைக் குறிக்கும்.

2.3"ஆணைக்குழு"என்ற பதம் வடக்கு மாகாணத்தின் மாகாணப் பொதுச்சேவை ஆணைக் குழுவினைக் குறிக்கும்

2.4"நியமன அதிகாரி"என்ற பதம் வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் அவர்களால் நியமனத்திற்கு உரிய குறித்த தத்துவங்கள் எவருக்குக் கையளிக்கப்படுகின்றதோ அவரைக் குறிப்பதாகும்.

2.5"செயலாளர்" என்ற பதம் வடக்கு மாகாணத்தில் கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம் எவ் அமைச்சிற்கென ஒதுக்கப்படுகின்றதோ அவ் அமைச்சின் செயலாளரைக் குறிக்கும்.

2.6'சேவை' என்பது மாகாண கூட்டுறவு பயிற்சி நிறுவனத்தின் நிலையக் காப்பாளர் பதவிக்கான சேவையைக் குறிக்கும்.

2.7""திருப்திகரமான சேவை"" என்பது

திருப்திகரமான சேவை காலம் என்பது, உத்தியோகத்தர் ஒருவர் வினைத்திறனுடனும் விடா முயற்சியுடனும் கடமைகளைப் புரிவதன் மூலமும் உரிய காலத்தில் நிகழும் வினைத்திறன் காண் பரீட்சைகளில் சித்தியெய்துதல் மூலமும் உரிய காலத்தில் நிகழும் சேவை உறுதிப்படுத்தலுக்கான தகைமைகளைப் பெறுவதன் மூலமும் ஆண்டு வேதன ஏற்றங்கள் அனைத்தையும் சம்பாதித்துள்ளதும் அவர் தண்டிக்கப்படத்தக்க தவறு எதனையும் புரிந்திருக்காததுமான காலப் பகுதி எனப்படும்.

2.8 'உரிய தினம்' என்பது இச் சேவைப் பிரமாணக்குறிப்பு நடைமுறைக்கு வரும் 01.01.2019 ஆந் திகதியைக் குறிக்கும்.

2.9 'உயிர்ப்பான சேவைக்காலம்' என்பது குறித்த பதவிக்குரிய சம்பளத்தைப் பெற்று உண்மையாகவே சேவையில் ஈடுபட்டிருந்த சேவைக் காலத்தைக் குறிக்கும். அரசாங்கத்தினால் அனுமதி வழங்கப்பட்ட பிரசவ விடுமுறை தவிர்ந்த மற்றைய அனைத்து சம்பளமற்ற விடுமுறைக் காலப்பகுதிகளும் உயிர்ப்பான சேவைக் காலத்திற்காக கணக்கில் எடுக்கப்படமாட்டாது.

TRUE COPY CERTIFIED CORRECT

G.Prathiban
Administrative Officer
Provincial Public Service Commission
Northern Province

பொ.வாகீசன்
கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும்
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும்
வட மாகாணம்

3. சேவைத் தொகுதிகள் பற்றிய விபரங்கள்

3.1 சேவைத் தொகுதி – ஆரம்ப மட்ட தொழிற் தேர்ச்சியற்ற சேவை (மாகாண கூட்டுறவு பயிற்சி நிறுவனத்தின் நிலையக் காப்பாளர்)

3.2 தரம் -III,II,I, விசேடம்

3.3 ஒப்படைக்கப்பட்ட பொறுப்புகள் பற்றிய பொது வரைவிலக்கணம் -

இச் சேவை வகை வடக்கு மாகாணத்தின் உரிய அமைச்சின் கீழான நிறுவனத்தின் பொதுவான களச்செயற்பாட்டுப் பணிகளின் ஆரம்ப நிலைத்தேவையான நடவடிக்கைகளைச் செயற்படுத்துவதிலும் பராமரிப்பதிலும் உதவுகின்றதுமானதும் குறிப்பிடத்தக்க திறன்களோ பகுதியளவான திறன்களோ இன்றி செய்யப்படக்கூடியதுமான அடிப்படைக் கடமைகள் சுமத்தப்படும் பல் கடமை வகைத் தொகுதிச் சேவையாக கருதப்படுகின்றது.

3.4 பணிகளின் ஒதுக்கீடு

பணிகள் அலுவலரது தரத்திற்கமைய ஒதுக்கப்படமாட்டா நியமன அதிகாரி அல்லது திணைக்களத் தலைவர் இச் சேவைத் தொகுதிக்குரிய எந்த ஒரு பணியையும் சேவையின் தன்மையைக் கருதி அலுவலரின் முதுமுறையிலும் தொழிற்தேர்ச்சி அடிப்படையிலும் குறித்த சேவைக்கான அலுவலருக்கும் ஒதுக்கீடு செய்யலாம்.

3.5 பதவியின் தன்மை : நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதும்

4. கட்டமைப்பு:

'சேவை' ஆனது பின்வரும் வருடாந்த சம்பள அளவுத் திட்டத்தைக் கொண்டதாகவும் ஊழியர் தரம் III இற்கு நியமனம் செய்யப்படுகின்றவர்களையும் இச் சேவையின் தரம் II, தரம் I மற்றும் விசேட தரங்களுக்கு தரமுயர்வு வழங்கப்படுபவர்களையும் உள்ளடக்கியதாகவும் அமையும்.

5. மாதாந்த இணைந்த சம்பள அளவுத் திட்டங்கள்:

5.1 ஊழியர் வகைக்குரிய குறியீட்டு இலக்கமும் மாதாந்த சம்பள அளவுத்திட்டமும்:

PL -01 – 2016 24,250 – 10 x250 – 10 x 270 – 10 x 300 – 12 x 330- 36,410/-

5.2 ஊழியர் வகைக்குரிய தரங்களும் அத் தரங்களுக்குரிய ஆரம்ப மாதச் சம்பளப் படிமுறைகளும்:

| தரம் | ஆரம்ப சம்பள படிநிலை | சம்பள அளவுத் திட்டம் |
|---|---|---|
| தரம் III | 01 | 24250 - 18 x 250 - 28750 |
| தரம் II | 12 | 27020 - 14 x 270 - 30800 |
| தரம் I | 22 | 29750 - 14 x 300 - 33950 |
| விசேட தரம் | 32 | 32780 - 11 x 330 - 36410 |

5.3 சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படும் அலுவலர்கள் மூன்று வருட கால தகுதி காண் காலத்திற்குட்பட்டவர்களாவர்.

TRUE COPY CERTIFIED CORRECT

பொ.வாகீசன்
கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும்
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும்
வட மாகாணம்

G.Prathiban
Administrative Officer
Provincial Public Service Commission
Northern Province

G. Prathiban
Administrative Officer
Provincial Public Service Commission
Northern Province

06. சேவைத் தொகுதியின் கீழ் அடங்கும் பதவிகள்

6.1 முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தினால் அனுமதிக்கப்பட்ட பதவிகளின் பதவிப் பெயரும் ஆளணியும்

| அனுமதிக்கப்பட்ட பதவிப் பெயர்கள் | அனுமதிக்கப்பட்ட பதவிக்கான தரங்கள் | அனுமதிக்கப்பட்ட ஆளணி |
|---|---|---|
| நிலையக் காப்பாளர் | தரம் III ,II,I மற்றும் விசேட தரம் | 01 |

6.2 மொத்தப் பணியாளர் எண்ணிக்கை – 01 .

நிலையக் காப்பாளர் சேவை தரம் III, II, I மற்றும் விசேட தரம் முதலியவற்றினதும் ஆளணிகள் பதவியுயர்வு நோக்கத்திற்காக ஒன்றிணைக்கப்படும்

07. ஆட்சேர்ப்புக்கான அடிப்படைத் தேவைகள்

7.1 விண்ணப்பதாரி இலங்கைப்பிரசையாக இருத்தல் வேண்டும்

7.2 விண்ணப்பதாரி விண்ணப்ப முடிவுத் திக்தியன்று 18 வயதுக்குக் குறையாதவராயும் 40 வயதுக்கு மேற்படாதவராயும் இருத்தல் வேண்டும்.

7.3 விண்ணப்ப முடிவுத்திகதிக்கு உடன் முந்திய ஆறு ஆண்டு காலப்பகுதிக்குள் ஆகக் குறைந்தது மூன்று ஆண்டுகளேனும் விண்ணப்பதாரி வடக்கு மாகாணத்தில் தொடர்ச்சியான நிரந்தர வதிவிடத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். (நிரந்தர வதிவிடம் வாக்காளர் பதிவின் மூலம் நிருபிக்கப்படவேண்டும்)

அல்லது

விண்ணப்பதாரர் அல்லது அவரது பெற்றோர் வடக்கு மாகாணத்தில் பிறந்திருப்பதுடன் வடக்கு மாகாணத்தினுள் ஆகக்குறைந்தது 5 ஆண்டுகாலம் தொடர்ச்சியான வதிவிடத்தையும் கொண்டிருத்தல் வேண்டும். (நிரந்தர வதிவிடம் வாக்காளர் பதிவின் மூலம் நிருபிக்கப்பட வேண்டும்)

7.4 விண்ணப்பதாரி சிறந்த நற்குண நடத்தையுள்ளவராக இருத்தல் வேண்டும்.

7.5 சிறந்த தேகாரோக்கியமுடையவராக இருத்தல் வேண்டும்.

TRUE COPY CERTIFIED CORRECT

G.Prathiban
Administrative Officer
Provincial Public Service Commission
Northern Province

08. ஆட்சேர்ப்பு முறைமை

8.1 ஆட்சேர்ப்பு வீதாசாரம்

| | |
|---|---|
| திறந்தது | 100% |
| மட்டுப்படுத்தப்பட்டது | பொருத்தமற்றது |
| முன்னுரிமை | பொருத்தமற்றது |
| | |

8.2 திறந்த முறை ஆட்சேர்ப்பு

8.2.1 ஆட்சேர்ப்புத்தரம் -தரம் III

8.2.2 கல்வித்தகைமைகள் க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத தடவைகளில் ஆகக் குறைந்தது இரண்டு பாடங்களில் திறமைச் சித்திகளுடன் (தமிழ் அல்லது சிங்களம் உட்பட) ஆறு (06) பாடங்களில் சித்தி அடைதல் வேண்டும்

பொ.வாகீசன்
கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும்
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும்
வட மாகாணம்

8.2.3 உடற்தகைமை

இலங்கையின் வடமாகாணத்தில் எப்பகுதியிலேனும் சேவையாற்றக்கூடிய உடற்தகுதியையும் உள நலத்தையும் விண்ணப்பதாரர் பெற்றிருப்பதுடன் பதவியின் கடமைகளை புரியக்கூடியவராயும் இருத்தல் வேண்டும்.

8.2.4 ஆட்சேர்ப்பு முறை

I. விண்ணப்பங்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை அல்லது செய்திப் பத்திரிகைகள் மற்றும் வடக்கு மாகாணத்தின் இணையத்தளத்தில் பிரசுரிக்கப்படும் விளம்பரங்கள் ஊடாகக் கோரப்படும். விண்ணப்பங்கள் கோரப்படும் போதான தேசிய மற்றும் மாகாணக் கொள்கைக்கமைய வெற்றிடங்கள் நிரப்பப்படும்.

II.கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வு நடாத்தப்பட்டு விண்ணப்பதாரர்களுக்குப் புள்ளிகள் வழங்கப்பட்டு புள்ளிகளின் திறமை ஒழுங்கில் வெற்றிடம் நிரப்பப்படும்.

8.2.5. கட்டமைக்கப்பட்ட நேர்முகத்தேர்வு

| புள்ளிகள் வழங்கப்படும் பிரதான தலைப்புகள் | ஆகக்கூடிய புள்ளிகள் |
|---|---|
| கல்வித் தகைமைகள் | 40 |
| சேவையுடன் தொடர்புடைய துறையில் பெற்ற அனுபவம் | 45 |
| நேர்முகத் தேர்வில் காண்பிக்கப்படும் திறமை மற்றும் தொடர்பாடல் திறன் | 15 |

கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வில் ஆகக் குறைந்தது 40 புள்ளிகள் பெற்றிருத்தல் வேண்டும்.

09. புள்ளியிடல் முறைமை மற்றும் கல்வித்தகைமைகள்

9.1 கல்வித் தகைமை

| கல்வித் தகைமை - க.பொ.த.சா/த பரீட்சை | பெறுபேறு | புள்ளிகள் |
|---|---|---|
| புதிய பாடத்திட்டம் | A | 05 |
| | B | 04 |
| | C | 03 |
| | S | 02 |
| பழைய பாடத்திட்டம் | D | 05 |
| | C | 04 |
| | S | 02 |

மேற்படி பெறுபேற்று புள்ளியிடல் முறைமைக்கு அமைய ஆகக் கூடியது 40 புள்ளிகள் வழங்கப்படும்.

9.2.<u>அனுபவம்</u> :- குறித்த பதவி தொடர்பாக ஏற்கனவே அரச திணைக்களம்/கூட்டுத்தாபனம்/ அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களில் அமைய/தற்காலிக/ஒப்பந்த சேவை அடிப்படையில் கடமையாற்றிய அனுபவத்திற்கு ஆண்டொன்றுக்கு 09 புள்ளிகள் வீதம் உச்சளவாக 45 புள்ளிகள் வழங்கப்படும்.

9.3 <u>நேர்முகத்தேர்வில் காண்பிக்கப்படும் திறமை மற்றும் தொடர்பாடல் திறனுக்காக</u> உச்சளவாக 15 புள்ளிகள்

பொ.வாகீசன்
கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும்
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும்
வட மாகாணம்

TRUE COPY CERTIFIED CORRECT

G.Prathiban
Administrative Officer
Provincial Public Service Commission
Northern Province

10. வினைத்திறன்காண் தடைகள்:

10.1 பரீட்சைகளின் விபரங்கள்

| வினைத்திறன்காண் தடைப் பரீட்சையின் விபரங்கள் | சித்தி பெறுவதற்கு அனுமதிக்கப்பட்ட காலப்பகுதி | வினைத்திறன்காண் தடையின் தன்மை |
|---|---|---|
| முதலாம் வினைத்திறன்காண் தடை | தரம் III இற்குரிய நியமனம் பெற்றதிலிருந்து 3 ஆண்டுகள் முடிவதற்கு முன்னர் | வாய்மொழிப் பரீட்சை (பாடத்திட்டம் பின்னிணைப்பு II) |
| இரண்டாவது வினைத்திறன்காண் தடை | தரம் II இற்குரிய நியமனம் பெற்றதிலிருந்து 3 ஆண்டுகள் முடிவதற்கு முன்னர் | வாய்மொழிப் பரீட்சை (பாடத்திட்டம் பின்னிணைப்பு II) |
| மூன்றாவது வினைத்திறன்காண் தடை | தரம் I இற்குரிய நியமனம் பெற்றதிலிருந்து 5 ஆண்டுகள் முடிவதற்கு முன்னர் | வாய்மொழிப் பரீட்சை (பாடத்திட்டம் பின்னிணைப்பு II) |

10.2. நிலையக் காப்பாளர் தரம் III தரம் II மற்றும் தரம் I இற்கான வினைத்திறன்காண் தடைப் பரீட்சைகள் நியமன அதிகாரியால் நடாத்தப்படும்.

10.3 வினைத்திறன்காண் தடைப்பரீட்சைகள் வருடத்தில் இரண்டு தடவைகள் நடாத்தப்படும்.

11.மொழித் தேர்ச்சி

| மொழி | பெறப்பட வேண்டிய தேர்ச்சி |
|---|---|
| 01.அரச கரும மொழி | ஏதும் ஒரு அரச கரும மொழியல்லாத மொழி மூலம் சேவையில் சேர்க்கப்பட்ட பணியாளர்கள் தகுதி காண் கால முடிவுக்குள் ஏதும் ஒரு அரச கரும மொழியில் தேர்ச்சி பெறல் வேண்டும் |
| 02.மற்றைய அரச கரும மொழி | 1/2014 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையினாலும் அதன் பின்பான சுற்றறிக்கையினதும் ஏற்பாட்டிற்கமைய இயைபுடைய மட்டத்தேர்ச்சியை பெறுதல் வேண்டும் |

12.தரங்களுக்கான பதவியுயர்வு - சாதாரண மட்டத்திலான செயலாற்றுகை

12.1 தரம் III இலிருந்து தரம் II ற்கான பதவியுயர்வு

I. பதவியில் நிரந்தரமாக்கப்பட்டிருத்தல்

II. சேவை வகையில் தரம் III இல் பத்து (10) வருட செயலூக்கமிக்க மற்றும் திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் மற்றும் பத்து (10) சம்பள ஏற்றங்களைப் பெற்றிருத்தல்.

III. அனுமதிக்கப்பட்ட செயலாற்றுகைக் மதிப்பீட்டு நடைமுறையின் பிரகாரம் பதவி உயர்வு வழங்கப்படுகின்ற திகதிக்கு முற்பட்ட பத்து (10) வருட காலப் பகுதியினுள் திருப்திகரமான செயலாற்றுகை மட்டத்தை அல்லது அதிலும் கூடிய செயலாற்றுகை மட்டத்தை கொண்டிருத்தல் வேண்டும்.

IV. பதவி உயர்வு பெறும் திகதிக்கு உடன் முன்னரான (05) வருட காலப்பகுதிக்குள் திருப்திகரமான சேவைக் காலமொன்றினை பூர்த்தி செய்திருத்தல்.

V. குறித்த மட்டத்திற்குரிய ஏனைய அரச கரும மொழித் தேர்ச்சியை பெற்றிருத்தல்.

VI. குறித்த வினைத்திறன்காண் தடைப் பரீட்சையில் உரிய தினத்தில் சித்தியடைந்திருத்தல்.

TRUE COPY CERTIFIED CORRECT
G.Prathiban
Administrative Officer
Provincial Public Service Commission
Northern Province

பொ.வாகீசன்
கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும்
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும்

12.1.1 பதவியுயர்வுக்கான முறைமை

தேவைப்படும் தகைமைகளைப் பெறும் பணியாளர் ஒருவர் நியமன அதிகாரிக்கு குறித்துரைக்கப்பட்ட மாதிரிக்கமைந்த (பின்னிணைப்பு III) படிவத்தில் பதவியுயர்வு கோரி விண்ணப்பிக்குமிடத்து திணைக்களத் தலைவரதும் இயைபுடைய அமைச்சுச் செயலாளரதும் விதந்துரைக்கமைய, பணியாளர் தகைமைகளைப் பூர்த்தி செய்த திகதி முதல் வலுவுடையதாக தரம் III இலிருந்து தரம் II இற்கு நியமன அதிகாரியினால் பதவியுயர்வு வழங்கப்படும்.

12.2 தரம் II இலிருந்து தரம் I இற்கு தரமுயர்த்துதல்

I. சேவை வகை தரம் II இல் ஆகக் குறைந்தது ஒன்பது (09) வருட செயலூக்கமிக்க மற்றும் தொடர்ச்சியான சேவைக்காலமொன்றினை பூர்த்தி செய்திருத்தல் மற்றும் ஒன்பது (09) சம்பள ஏற்றங்களைப் பெற்றிருத்தல்.
II. பதவி உயர்வு வழங்கப்படும் தினத்துக்கு உடன் முன்னரான ஐந்து (05) வருட திருப்திகரமான சேவைக்காலமொன்றினைப் பூர்த்தி செய்திருத்தல்.
III. அனுமதிக்கப்பட்ட செயலாற்றுகைக் மதிப்பீட்டு நடைமுறையின் பிரகாரம் பதவி உயர்வுத் திகதிக்கு முன்னரான ஒன்பது (09) வருட காலப் பகுதியினுள் திருப்திகரமான செயலாற்றுகை மட்டத்தை அல்லது அதிலும் கூடிய செயலாற்றுகை மட்டத்தை கொண்டிருத்தல் வேண்டும் .
IV. சம்பந்தப்பட்ட வினைத்திறன்காண் தடைப் பரீட்சையில் உரிய தினத்தன்று சித்தியடைந்திருத்தல்.

12.2.1 பதவியுயர்வுக்கான முறைமை

தேவைப்படும் தகைமைகளைப் பெறும் பணியாளர் ஒருவர் நியமன அதிகாரிக்கு குறித்துரைக்கப்பட்ட மாதிரிக்கமைந்த (பின்னிணைப்பு IV) படிவத்தில் பதவியுயர்வு கோரி விண்ணப்பிக்குமிடத்து திணைக்களத் தலைவரதும் இயைபுடைய அமைச்சுச் செயலாளரதும் விதந்துரைக்கமைய, பணியாளர் தகைமைகளைப் பூர்த்தி செய்த திகதி முதல் வலுவுடையதாக தரம் II இலிருந்து தரம் I இற்கு நியமன அதிகாரியினால் பதவியுயர்வு வழங்கப்படும்.

12.3 தரம் I இலிருந்து விசேட தரத்திற்கான பதவியுயர்வு

I. சேவை வகை தரம் I இல் ஆகக் குறைந்தது ஒன்பது (9) வருட செயலூக்கமிக்க மற்றும் தொடர்ச்சியான சேவைக் காலமொன்றினை பூர்த்தி செய்திருத்தல் மற்றும் ஒன்பது (09) சம்பள ஏற்றங்களைப் பெற்றிருத்தல்.
II. பதவி உயர்வு வழங்கப்படும் தினத்துக்கு உடன் முன்னரான ஐந்து (05) வருட திருப்திகரமான சேவைக்காலமொன்றினைப் பூர்த்தி செய்திருத்தல்.
III. .அனுமதிக்கப்பட்ட செயலாற்றுகை மதிப்பீட்டு நடைமுறையின் பிரகாரம் பதவி உயர்வு பெறும் திகதிக்கு உடன் முன்னரான ஒன்பது (09) வருடங்களில் திருப்திகரமானதுமான மட்டத்தில் அல்லது அதனை விட உயர்ந்தளவிலான செயலாற்றுகையை வெளிப்படுத்தியிருத்தல்.
IV. சம்பந்தப்பட்ட வினைத்திறனகாண் தடைப்பரீட்சையில் உரிய காலப்பகுதியினுள் சித்தியடைந்திருத்தல்

12.3.1 பதவியுயர்வுக்கான முறைமை

தேவைப்படும் தகைமைகளைப் பெறும் பணியாளர் ஒருவர் நியமன அதிகாரிக்கு குறித்துரைக்கப்பட்ட மாதிரிக்கமைந்த (பின்னிணைப்பு V) படிவத்தில் பதவியுயர்வு கோரி விண்ணப்பிக்குமிடத்து திணைக்களத் தலைவரதும் இயைபுடைய அமைச்சுச் செயலாளரதும் விதந்துரைக்கமைய பணியாளர் தகைமைகளைப் பூர்த்தி செய்த திகதி முதல் வலுவுடையதாக தரம் I இலிருந்து விசேட தரத்திற்கு நியமன அதிகாரியினால் பதவியுயர்வு வழங்கப்படும்.

TRUE COPY CERTIFIED CORRECT
G.Prathaban
Administrative Officer
Provincial Public Service Commission
Northern Province

பொ.வாகீசன்
கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும்
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும்
வட மாகாணம்

ஏற்பாடு செய்யப்படாத விடயங்கள்

இச் சேவைப் பிரமாணக் குறிப்பில் ஏற்பாடு செய்யப்பட்டிராத எவ்விடயம் தொடர்பிலும் வடமாகாணத்தின் கௌரவ ஆளுநர் அவர்களால் தீர்மானம் எடுக்கப்படும்.

தயாரித்தவர்

ஒப்பம்.......................

பெயர்:- திருமதி வத்சலா தேவி

பதவி:- முகாமைத்துவ சேவையாளர்

செவ்வைபார்த்தவர்
(விடயத்திற்குப் பொறுப்பான பதவிநிலை அலுவலர்)

ஒப்பம்.......................

பெயர்.......Mrs. N. SOUNTHARARAJ

பதவி:-.......Administrative Officer
Department of Co-operative Devel.
Northern Province

செயலாளர்
மகளிர் விவகாரம் மற்றும் கூட்டுறவு அமைச்சு
வடக்கு மாகாணம்

கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட நிலைய காப்பாளர் பதவிக்கான சேவைப் பிரமாணக் குறிப்பானது (இணைப்பு I, II, III, IV, V அடங்கலாக 01 – 12 பக்கங்கள் வரை) சிபாரிசு செய்யப்படுகிறது.

திரு. பொ. வாகீசன்
ஆணையாளர்,
கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம்
வடக்கு மாகாணம்

பொ.வாகீசன்
கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும்
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும்
வட மாகாணம்

செயலாளர்
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு
வடக்கு மாகாணம்.

கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் கீழுள்ள மாகாண கூட்டுறவு பயிற்சி நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட நிலைய காப்பாளர் பதவிக்கான சேவைப்பிரமாணக் குறிப்பானது (இணைப்பு I, II, III, IV, V அடங்கலாக 01 – 12 பக்கங்கள் வரை) சிபாரிசு செய்யப்படுகிறது.

திரு. ஆர். வரதீஸ்வரன்
செயலாளர்
மகளிர் விவகாரம் மற்றும் கூட்டுறவு அமைச்சு
வடக்கு மாகாணம்.

ஆர்.வரதீஸ்வரன்
செயலாளர்
மகளிர் விவகாரம், புனர்வாழ்வளித்தல், சமூக சேவைகள், கூட்டுறவு, உணவு வழங்கலும் விநியோகமும், தொழிற்துறை தொழில் முனைவோர் மேம்பாடும் மற்றும் வர்த்தகமும் வாணிபமும் அமைச்சு - வட மாகாணம்

கௌரவ ஆளுநர்,
வடக்கு மாகாணம்

கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் கீழுள்ள மாகாண கூட்டுறவு பயிற்சி நிறுவனத்தின் நிலைய காப்பாளர் பதவிக்கான சேவைப்பிரமாணக் குறிப்பானது(இணைப்பு I, II, III, IV, V அடங்கலாக 01 – 12 பக்கங்கள் வரை) தங்களால் நியமிக்கப்பட்ட குழுவினால் சிபாரிசு செய்யப்பட்டு தங்களின் அங்கீகாரத்தின் பொருட்டு கௌரவத்துடன் சமர்ப்பிக்கப்படுகிறது.

TRUE COPY CERTIFIED CORRECT

திரு. அ. சிவபாலசுந்தரன்
செயலாளர்
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு
வடக்கு மாகாணம்.

அ.சிவபாலசுந்தரன்
செயலாளர்
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு
வடமாகாணம்

G.Prathiban
Administrative Officer
Provincial Public Service Commission
Northern Province

அங்கீகரிக்கப்படுகிறது.

கௌரவ. கலாநிதி சுரேன் ராகவன்
ஆளுநர்
வடக்கு மாகாணம்.

Dr.Suren Rāghavan
Governor
Northern Province

பொ.வாகீசன்
கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும்
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும்
வட மாகாணம்

பின்னிணைப்பு I

உத்தியோகத்தரின் செயற்பாடுகள்.

அ. கடமைகு சரியான நேரததில வருதல்.

ஆ. அலுவலகக் கட்டடம் மற்றும் வளாகத்தினை பொறுப்பேற்றல்

இ. அலுவலக இருப்புக்களின் பாதுகாப்பை உறுதிசெய்தல்.

ஈ. அலுவலக வளாகத்தினை பராமரித்தல்.

உ. பூக்கும் தாவரங்களினையும், நிழலிற்காக வைக்கப்பட்ட தாவரங்களினையும் பராமரித்தல்.

ஊ. அலுவலக காரணங்களுக்காக அலுவலகத்திற்கு வருகைதரும் விருந்தினர்களின் வருகையினை பதிவு செய்தல்.

எ. வெளிப்புற தொலைபேசி வசதிகள் இருந்தால், உள்வரும் அழைப்புக்களில் பெற்ற தகவல் முக்கியமானதெனில் அவற்றை சம்மந்தப்பட்ட அதிகாரிக்கு அறிவித்தல்.

ஏ. சேவைக்கு உட்படாத நாட்களான சனிக்கிழமை, மற்றும் பொது விடுமுறை நாட்களிலும் தேவைக்கேற்ப கடமைக்கு சமூகமளித்தல்.

ஒ. நீர் மற்றும் மின் விரயம் மற்றும் ஏனைய வளங்களின் விரயத்தினை தடுப்பதற்காக உடனடியாக நடவடிக்கையினை எடுத்தல்.

ஓ. அலுவலக சுத்திகரிப்பு மற்றும் பாதுகாப்பிற்கு பொறுப்பான அலுவலகருக்கு ஒத்துழைப்பினை வழங்குதல்

ஔ. திணைக்கள தலைவரால் நியமிக்கப்படும் ஏனைய வேறு கடமைகளில் ஈடுபடல்.

TRUE COPY CERTIFIED CORRECT

G.Prathiban
Administrative Officer
Provincial Public Service Commission
Northern Province

பொ.வாகீசன்
கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும்
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும்
வட மாகாணம்

பின்னிணைப்பு II

01. வினைத்திறன்காண் தடை பரீட்சை.

வினைத்திறன்காண் தடை பரீட்சையின் விபரமும் பாடத்திட்டமும்

| வினைத்திறன் காண் தடை பரீட்சை | தேர்வில் தேர்ச்சிபெறுவதற்கான காலமுடிவு. (ஆண்டுகளின் எண்ணிக்கை.) | எழுத்துப்பரீட்சை/ தொழிற்பரீட்சை/ சான்றிதழ் கற்கைகள் ஏனைய வினைத்திறன்காண் தடை பரீட்சையின் தன்மை. |
|---|---|---|
| 1வது வினைத்திறன் காண் தடை பரீட்சை | தரம் III ற்கான நியமன திகதியிலிருந்து 03 வருடங்கள் முடிவதற்கு முன்பு | வாய் மொழி மூலப் பரீட்சை<br>• அவர் பணியாற்றும் நிறுவனத்திற்கு ஒப்படைக்கப்படும் பணிகளில் இருந்து போதியளவு அறிவினை ஊழியர் பெற்றுக் கொள்கிறாரா என்பதை பரீட்சிப்பதற்கு – 30 புள்ளிகள்<br>• தனது சேவை தொடர்பாக பொது அலுவலக முறைமை மற்றும் நிறுவன நிர்வாக முறைமையில் போதியளவு அறிவினை ஊழியர் பெற்றுக் கொள்கிறாரா என்பதை பரீட்சிப்பதற்கு – 30 புள்ளிகள்<br>• தனது பதவிக்கு ஒப்படைக்கப்படும் பல்வேறு பணிகள் தொடர்பாக போதியளவு அறிவினையும் தேர்ச்சியினையும் ஊழியர் பெற்றுக் கொள்கிறாரா என்பதை பரீட்சிப்பதற்கு – 40 புள்ளிகள் |
| 2வது வினைத்திறன் காண் தடை பரீட்சை | தரம் II ற்கான நியமன திகதியிலிருந்து 03 வருடங்கள் முடிவதற்கு முன்பு | வாய் மொழி மூலப் பரீட்சை<br>1வது வினைத்திறன்காண் தடை பரீட்சையில் உள்ளடக்கப்பட்ட பாடங்கள் மற்றும் ஊழியரின் திறன்கள் தொடர்பாக கடந்த காலகட்டத்தில் துறையில் செய்யப்பட்ட நடைமுறை மற்றும் சட்ட திருத்தங்கள் குறித்த ஊழியரின் அறிவை பரீட்சிப்பதற்கு<br>(1வது வினைத்திறன்காண் தடை பரீட்சையின் பிரிவிற்கேற்ப புள்ளிகள் ஒதுக்கப்படும்) |
| 3வது வினைத்திறன் காண் தடை பரீட்சை | தரம் I ற்கான நியமன திகதியிலிருந்து 03 வருடங்கள் முடிவதற்கு முன்பு | வாய் மொழி மூலப் பரீட்சை<br>1வது மற்றும் 2வது வினைத்திறன்காண் தடை பரீட்சையில் உள்ளடக்கப்பட்ட பாடங்கள் மற்றும் ஊழியரின் திறன்கள் தொடர்பாக கடந்த காலகட்டத்தில் துறையில் செய்யப்பட்ட நடைமுறை மற்றும் சட்ட திருத்தங்கள் குறித்த ஊழியரின் அறிவை பரீட்சிப்பதற்கு<br>(1வது வினைத்திறன்காண் தடை பரீட்சையின் பிரிவிற்கேற்ப புள்ளிகள் ஒதுக்கப்படும்) |

குறிப்பு:- ஒவ்வொரு வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சையிலும் சித்தி பெறுவதற்கு ஆகக் குறைந்தது 40 புள்ளிகள் பெற்றிருத்தல் வேண்டும்.

TRUE COPY CERTIFIED CORRECT

G.Prathiban
Administrative Officer
Provincial Public Service Commission
Northern Province

பொ.வாகீசன்
கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர்
கூட்டுறவுச் சங்கங்களின் பதி...

பின்னிணைப்பு III

நிலைய காப்பாளர் தரம் III இலிருந்து தரம்IIற்கு பதவியுயர்வதற்கான விண்ணப்ப படிவம்

1.

1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் :...............................................................
1.2 முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர் :.........................................................
1.3 பிறந்த திகதி :.............................................................
1.4 தேசிய அடையாள அட்டை :.......................................................................
1.5 நிலைய காப்பாளர் சேவையின் நியமனத் திகதி :..........................................
1.6 சேவையில் உறுதி செய்யப்பட்ட திகதி :....................................................
1.7 வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையில் சித்தி பெற்ற திகதி: ..........................
1.8 தரம் III ல்10 வருட கால சேவையினை பூர்த்தி செய்த திகதி : ........................
1.9 அலுவலகத்தின் பெயரும் முகவரியும் :....................................................

எனது அறிவிற்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வகையில் இதில் வழங்கப்பட்ட விடயங்கள் யாவும் உண்மையானதென நான் உறுதிசெய்கிறேன்.

விண்ணப்பதாரரின் பிரகடனம்

இவ் விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவை என்றும் செம்மையானவை என்றும் இதன் மூலம் வெளிப்படுத்துகின்றேன். மேலும் என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் பொய்யானவை அல்லது தவறானவை எனப் பதவியுயர்வுக்கு முன் கண்டறியப்பட்டால் நான் தகுதி நீக்கத்திற்கு உள்ளாக்கப்படுவதற்கும் பதவியுயர்வுக்கு பின்னர் கண்டறியப்பட்டால் எனது பதவியுயர்வு மீளப்பெறப்படுவதற்கும் ஆளாவேன் என்பதையும் ஏற்றுக்கொள்கின்றேன். எனக்கு மாகாண நிலையக் காப்பாளர் சேவையின் II ஆம் தரத்திற்கு ......................ஆம் திகதி முதல் பதவியுயர்வு வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

திகதி:- ........................

...............................
விண்ணப்பதாரரின் ஒப்பம்

ஆணையாளர்,
கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம்
வடக்கு மாகணம்

இப் பணியாளர்

I. தரம் IIIல் பதவியுயர்வுக்கு உடன் முந்திய பத்து வருட செயலூக்கமிக்க மற்றும் திருப்திகரமானதுமான சேவையைப் பூர்த்தி செய்துள்ளார் / செய்யவில்லை.
II. பதவியுயர்வு பெறும் திகதிக்கு உடன் முந்திய 5 ஆண்டுக்காலத்தில் திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்துள்ளார் / செய்யவில்லை.
III. குறித்த 10 வருடகாலத்தில் சம்பளமற்ற / அரைச்சம்பள விடுமுறைகளைப் பெறவில்லை / பெற்றுள்ளார்.
IV. குறித்த காலப்பகுதிகுள எச்சரிக்கை தவிர்ந்த வேறெந்த தண்டனைகளுக்கும் உள்ளாகவில்லை / உள்ளாகியுள்ளார்.
V. அவருக்கெதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது / எடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது / எடுக்கப்படவோ அல்லது உத்தேசிக்கப்படவோ இல்லை.
VI. குறித்த காலப்பகுதிக்குரிய சம்பளவேற்றங்கள் யாவும் உழைக்கப்பட்டுள்ளன / உழைக்கப்படவில்லை.
VII. நியமனத்தில் ............... ஆம் திகதி முதல் உறுதிப்படுத்தப்பட்டுள்ளார் / இதுவரை உறுதிப்படுத்தப்படவில்லை.
VIII. 1ம் வினைத்திறன்காண் தடைப் பரீட்சையில் சித்தி பெற்றுள்ளார்.
IX. அரசகரும மொழியில் சித்தி பெறும் தேவையினைப் பூர்த்தி செய்துள்ளார் / செய்யவில்லை.

மேற்படி பணியாளர் திரு. ............................ அவர்கள் மாகாண நிலையக் காப்பாளர் சேவையில் தரம் II பதவியுயர்வுக்கு பொதுவான செயற்பாட்டின் கீழ் தேவைப்படும் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் எனவும் மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவையும் செம்மையானவையும் எனவும் நான் திருப்தி அடைகிறேன். இதற்கமைய ................ திகதி முதல் அவரது தரம் II இற்கான பதவியுயர்வு விதந்துரைக்கப்பட்டு விண்ணப்பம் முன்னளிக்கப்படுகின்றது.

TRUE COPY CERTIFIED CORRECT

திகதி:- ....................

........................
பணிப்பாளர்
மாகாண கூட்டுறவு பயிற்சி நிறுவனம்

பொ.வாகீசன்
கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும்
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும்
வட மாகாணம்

G.Prathiban
Administrative Officer
Provincial Public Service Commission
Northern Province

பின்னிணைப்பு IV

நிலைய காப்பாளர் தரம் IIஇலிருந்து தரம் Iற்கு பதவியுயர்வதற்கான விண்ணப்ப படிவம்

I.

1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் :................................................

1.2 முதலெழுத்துகள் குறிக்கும் பெயர் : ..................................................

1.3 பிறந்த திகதி : .....................................................

1.4 தேசிய அடையாள அட்டை : .....................................................

1.5 நிலைய காப்பாளர் சேவையின் நியமனத் திகதி :........................................

1.6 சேவையில் உறுதி செய்யப்பட்ட திகதி :...................................................

1.7 தரம் IIற்கு பதவியுயர்ந்த திகதி:..................................................................

1.8 வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையில் சித்தி பெற்ற திகதி (தரம்II)..................

1.9 தரம் II ல் 09 வருட கால சேவையினை பூர்த்தி செய்த திகதி : ......................

1.10 அலுவலகத்தின் பெயரும் முகவரியும் : ..................................................

எனது அறிவிற்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வகையில் இதில் வழங்கப்பட்ட விடயங்கள் யாவும் உண்மையானதென நான் உறுதிசெய்கிறேன்.

2. .விண்ணப்பதாரரின் பிரகடனம்

இவ் விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவை என்றும் செம்மையானவை என்றும் இதன் மூலம் வெளிப்படுத்துகின்றேன். மேலும் என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் பொய்யானவை அல்லது தவறானவை எனப் பதவியுயர்வுக்கு முன் கண்டறியப்பட்டால் நான் தகுதி நீக்கத்திற்கு உள்ளாக்கப்படுவதற்கும் பதவியுயர்வுக்கு பின்னர் கண்டறியப்பட்டால் எனது பதவியுயர்வு மீளப்பெறப்படுவதற்கும் ஆளாவேன் என்பதையும் ஏற்றுக்கொள்கின்றேன். எனக்கு மாகாண நிலையக் காப்பாளர் சேவையின் II ஆம் தரத்திற்கு ..............ஆம் திகதி முதல் பதவியுயர்வு வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

TRUE COPY CERTIFIED CORRECT

திகதி:- ........................

.........................

விண்ணப்பதாரரின் ஒப்பம

G.Prathiban
Administrative Officer
Provincial Public Service Commission
Northern Province

ஆணையாளர்,
கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம்
வடக்கு மாகணம்

இப் பணியாளர்

I. தரம் II ல் பதவியுயர்வுக்கு உடன் முந்திய ஒன்பது வருட கால செயலூக்கமிக்க மற்றும் திருப்திகரமானதுமான சேவையைப் பூர்த்தி செய்துள்ளார் / செய்யவில்லை.

II. பதவியுயர்வுக்கு உடன் முந்திய 5 ஆண்டுக்காலத்தில் திருப்திகரமான சேவையைப்பூர்த்தி செய்துள்ளார் / செய்யவில்லை.

III. குறித்த 9 வருட காலத்தில் சம்பளமற்ற / அரைச்சம்பள விடுமுறைகளைப் பெறவில்லை / பெற்றுள்ளார்.

IV. குறித்த காலப்பகுதிக்குள் எச்சரிக்கை தவிர்ந்த வேறெந்த தண்டனைகளுக்கும் உள்ளாகவில்லை / உள்ளாகியுள்ளார்

V. அவருக்கெதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது / எடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது / எடுக்கப்படவோ அல்லது உத்தேசிக்கப்படவோ இல்லை.

VI. குறித்த காலப்பகுதிக்குரிய சம்பள ஏற்றங்கள் யாவும் உழைக்கப்பட்டுள்ளன / உழைக்கப்படவில்லை.

VII. நியமனத்தில் ............... ஆம் திகதி முதல் உறுதிப்படுத்தப்பட்டுள்ளார் / இதுவரை உறுதிப்படுத்தப்படவில்லை.

VIII. 1ம், 2ம் .வினைத்திறன் தடைப் பரீட்சைகளில் சித்தி பெற்றுள்ளார்.

IX. அரசகரும மொழியில் சித்தி பெறும் தேவையினைப் பூர்த்தி செய்துள்ளார் / செய்யவில்லை.

மேற்படி பணியாளர் திரு. .............................. அவர்கள் மாகாண நிலையக் காப்பாளர் தரம் I பதவியுயர்வுக்கு பொதுவான செயற்பாட்டின் கீழ் தேவைப்படும் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் எனவும் மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவையும் செம்மையானவையும் எனவும் நான் திருப்தி அடைகிறேன்.இதற்கமைய ................ திகதி முதல் அவரது தரம் I இற்கான பதவியுயர்வு விதந்துரைக்கப்பட்டு விண்ணப்பம் முன்னளிக்கப்படுகின்றது.

திகதி:- ....................

..........................................

பொ.வாகீசன்
கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர்
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர்
வட மாகாணம்

பணிப்பாளர்
மாகாண கூட்டுறவு பயிற்சி நிறுவனம்

பின்னிணைப்பு V

நிலைய காப்பாளர் தரம்I இருந்து விசேட தரத்திற்கு பதவியுயர்வதற்கான விண்ணப்ப படிவம்

1.

1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் :……………………………………………………

1.2 முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர் : ……………………………………………………

1.3 பிறந்த திகதி : ……………………………………………………

1.4 தேசிய அடையாள அட்டை : ……………………………………………………

1.5 நிலைய காப்பாளர் சேவையின் நியமனத் திகதி :……………………………………………

1.6 சேவையில் உறுதி செய்யப்பட்ட திகதி : ……………………………………………………

1.7 தரம் Iற்கு பதவியுயர்ந்த திகதி :…………………………………………………

1.8 வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையில் சித்தி பெற்ற திகதி (தரம்I) ………………………………

1.11 தரம் Iல் 09 வருட கால சேவையினை பூர்த்தி செய்த திகதி : ………………………………………

1.12 அலுவலகத்தின் பெயரும் முகவரியும் : ……………………………………………………

எனது அறிவிற்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வகையில் இதில் வழங்கப்பட்ட விடயங்கள் யாவும் உண்மையானதென நான் உறுதிசெய்கிறேன்.

2. விண்ணப்பதாரரின் பிரகடனம்

இவ் விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவை என்றும் செம்மையானவை என்றும் இதன் மூலம் வெளிப்படுத்துகின்றேன். மேலும் என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் பொய்யானவை அல்லது தவறானவை எனப் பதவியுயர்வுக்கு முன் கண்டறியப்பட்டால் நான் தகுதி நீக்கத்திற்கு உள்ளாக்கப்படுதற்கும் பதவியுயர்வுக்கு பின்னர் கண்டறியப்பட்டால் எனது பதவியுயர்வு மீளப்பெறப்படுவதற்கும் ஆளாவேன் என்பதையும் ஏற்றுக்கொள்கின்றேன். எனக்கு மாகாண நிலையக் காப்பாளர் சேவையின் விசேட தரத்திற்கு ..............ஆம் திகதி முதல் பதவியுயர்வு வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

திகதி:- ........................ TRUE COPY CERTIFIED CORRECT ............................

விண்ணப்பதாரரின் ஒப்பம்

G.Prathiban
Administrative Officer
Provincial Public Service Commission
Northern Province

ஆணையாளர்,
கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம்
வடக்குமாகாணம்

இப் பணியாளர்

I. தரம் I ல் பதவியுயர்வுக்கு உடன் முந்திய 10 வருட காலத்தில் ஒன்பது வருட காலத்தில் செயலூக்கமிக்கதும் மற்றும் திருப்திகரமானதுமான சேவையைப் பூர்த்தி செய்துள்ளார் / செய்யவில்லை

II. பதவியுயர்வுக்கு உடன் முந்திய 5 ஆண்டுக்காலத்தில் திருப்திகரமான சேவையைப்பூர்த்தி செய்துள்ளார் / செய்யவில்லை.

III. குறித்த 9 வருட காலத்தில் சம்பளமற்ற / அரைச்சம்பள விடுமுறைகளைப் பெறவில்லை / பெற்றுள்ளார்.

IV. குறித்த காலப்பகுதிக்குள் எச்சரிக்கை தவிர்ந்த வேறெந்த தண்டனைகளுக்கும் உள்ளாகவில்லை / உள்ளாகியுள்ளார்

V. அவருக்கெதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது / எடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது / எடுக்கப்படவோ அல்லது உத்தேசிக்கப்படவோ இல்லை.

VI. குறித்த காலப்பகுதிக்குரிய சம்பள வேற்றங்கள் யாவும் உழைக்கப்பட்டுள்ளன / உழைக்கப்படவில்லை.

VII. நியமனத்தில் …………… ஆம் திகதி முதல் உறுதிப்படுத்தப்பட்டுள்ளார் / இதுவரை உறுதிப்படுத்தப்படவில்லை.

VIII. 1ம் 2ம் 3ம் .வினைத்திறன் தடைப் பரீட்சைகளில் சித்தி பெற்றுள்ளார்.

IX. மற்றைய உத்தியோக மொழியிற் சித்தி பெறும் தேவையினைப் பூர்த்தி செய்துள்ளார் / செய்யவில்லை.

மேற்படி பணியாளர் திரு. ……………………… அவர்கள் மாகாண நிலையக் காப்பாளர் சேவையில் விசேட தரத்திற்கு பதவியுயர்வுக்கு பொதுவான செயற்பாட்டின் கீழ் தேவைப்படும் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் எனவும் மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவையும் செம்மையானவையும் எனவும் நான் திருப்தி அடைகிறேன்.இதற்கமைய …………… திகதி முதல் அவரது விசேட தரத்திற்கான பதவியுயர்வு விதந்துரைக்கப்பட்டு விண்ணப்பம் முன்னளிக்கப்படுகின்றது.

திகதி:- ...................

பொ.வாகீசன்
கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும்
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும்
வட மாகாணம்

……………………
பணிப்பாளர்
மாகாண கூட்டுறவு பயிற்சி நிறுவனம்